Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 9, 2023

புதன்கிழமை ஒகஸ்ட் 09, 2023 | ஒளி: 09 கதிர் 058 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## 5 இடங்கள் இந்தியாவுக்கு

திருகோணமலை, காங்கேசன்துறை, பலாலி விமான நிலையம் ஆகியவற்றை இந்தியாவுக்கு வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் பாராளுமன்ற விவாதம் ஒன்று வேண்டும் என வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



மீளப் பெறப்பட்ட சில அதிகாரங்களை மீண்டும் வழங்கி

# 13ஐ அசல் வடிவில் நடைமுறைப்படுத்துக

## 5 தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதிக்க கடிதம்

மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்ட சில அதிகாரங்களை மீண்டும் வழங்கி, காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தத்தை அதன் அசல் வடிவில் நடைமுறைப்படுத்த தாங்கள் முன்மொழிவதாக ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவை அடங்கிய கூட்டணிக்காகவும் அதன் சார்பாகவும் எம். பிக்களான செல்வம் அடைக்கலநாதன் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரால் இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தை செயல்படுத்துவது குறித்த கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் சம்பந்தமாக குறித்த கடிதம் தலைப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டணியாக மேற்கூறியவை தொடர்பாக ஒகஸ்ட் 2ஆம் திகதியிட்ட கடிதத்தை மேற்கோள் காட்டி, தங்கள் கருத்துக்களைப் பின்வருமாறு முன்வைக்க விரும்புவதாக அதில் குறிப்பிடப்பட்டு கீழ்க்குறிப்பிட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## பழைய விமானங்கள் மூலம் பலி கொடுக்க முயற்சியா?

### அரசாங்கத்திடம் தயாசிறி எம்.பி கேள்வி

திருகோணமலையில் விமானப் பயிற்சியின்போது இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்த இருவரின் மரணத்துக்கு யார் காரணம்? என்றும் பழைய விமானங்களை பயன்படுத்தி இன்னமும் உயிர்களை பலி கொடுக்க அரசாங்கம் முயல்கிறதா? என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



இரசாயன தொழிற்சாலையில் தீ

## கணக்காளர் பலி; மாணவர்கள் சுகயீனம்



கந்தானை பள்ளிய வீதியிலுள்ள இரசாயன தொழிற்சாலையொன்றில் பரவிய தீயில் சிக்கி தொழிற்சாலையில் கணக்காளராக பணியாற்றிய ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், தீயினால் ஏற்பட்ட புகையால் பாதிக்கப்பட்ட 50க்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள், கொழும்பு வடக்கு (ராகம) போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## துப்பாக்கி சூட்டில் இளம் தம்பதி பலி

### வாய்த்தர்க்கம் வலுவடைந்ததால் விபரீதம்

டி.சந்ரு செ. திவாகரன், ஆர்.ரமேஷ், கௌசல்யா

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி பிரதான வீதிக்கு அருகில் இலக்கம் ஐந்து டொப்பாஸ் பகுதியில் திங்கட்கிழமை (07) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கணவனும் மனைவியும் உயிரழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## சிறையிலுள்ள 56 மதகுருக்களில் 48 பேர் பௌத்த பிக்குமார்

துஷ்பிரயோகம், பெண் பாலியல் வல்லுறவு நிதி மோசடி, புதையல் தோண்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களில் 48 பேர் பௌத்த பிக்குகள் என்று நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது சுயாதீன எதிரணி எம்.பி. டலஸ் அழகபெருமவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆண் விபசாரி என்றதால் சபையில் சலசலப்பு

கட்சி தலைவராகும் நோக்கத்தில் இருந்து கொண்டு செயற்படும் எம்.பியொருவர் பாராளுமன்றத்தில் ஆண் விபசாரி போல் செயற்படுகிறார் என்று இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்ததையடுத்து சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

தொடர்ச்சி P2



நுரைச்சோலையில்

## மின் பிறப்பிக்கும் அலகு பழுதடைந்தது

### மின்வெட்டு அமுலாகாது என்கிறார் அமைச்சர்



நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தில் இருந்து தேசிய மின் கட்டமைப்புக்கு 270 மெகாவாட் மின்சாரத்தை வழங்கும் மின்பிறப்பாக்கும் அலகொன்று, செவ்வாய்க்கிழமை (08) அதிகாலை பழுதடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. அங்குள்ள மூன்று அலகுகளில், கடந்த ஜூன் மாதம் பராமரிப்பு பணிக்காக ஒரு அலகு நிறுத்தப்பட்டிருந்த நிலையில், மற்றொரு அலகும் செயலிழந்துள்ளது.

தொடர்ச்சி P2

## பொதுப் போக்குவரத்தில் மின்சார பஸ்கள் அறிமுகம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக 2048 ஆம் ஆண்டளவில் பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையில் மின்சாரப் பஸ்களை இணைக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், அது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் அடுத்த சில மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



பிரதேச, நகர, மாநகர

## திருத்தங்களை அமலாக்க மக்கள் வாக்கெடுப்பு தேவை

### சபைக்கு உயர்நீதிமன்றம் வியாக்கியானம்

பிரதேச சபைகள் (திருத்தம்)", "நகர சபைகள் (திருத்தம்)" மற்றும் "மாநகர சபைகள் (திருத்தம்)" எனும் மூன்று சட்டமூலங்களிலும் ஒருசில ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானவை என்பதனால் இவற்றை அமுல்படுத்த வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையுடன்,

தொடர்ச்சி P2

கொக்குத்தொடுவாய்

## மனித புதைகுழி அகழ்வுக்கு அரச நிதி

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வுக்காக அரச நிதி கிடைக்க இருப்பதாக காணாமல் போனோர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன் நீதிபதி ரி.பார்த்தீபன் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (08) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நேரில் சென்ற களஆய்வினை மேற்கொண்டு அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2




விவசாயிகளின் போராட்டத்தை வெளிப்படுத்திய

## ஊடகங்களுக்கு எதிராக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க நடவடிக்கை

### சீனி மோசடி, வரி நிவாரணத்துக்கு அமைக்கவில்லை என சஜித் தெரிவிப்பு

விவசாயிகளின் நீருக்கான போராட்டத்தை நாட்டுக்கு வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு எதிராக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக குற்றம்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சீனி மோசடி, வரி குறைப்பின் மூலம் தனவந்தர்களுக்கு கோடிக்கணக்கில் வரி நிவாரணம் வழங்கியமை போன்ற விடயங்களுக்கு தெரிவுக்குழு



தொடர்ச்சி P2

தமிழர்களின் பூர்வீக நிலங்களை

## வலிந்து ஆக்கிரமிக்கும் அதியுச்ச வெளிப்பாடு

### வர்த்தமானிகளை மீளப்பெறுமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

நிதர்ஷன் வினோத்

மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தியுள்ளமை தமிழர்களது பூர்வீக நிலங்களை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வதன் அதிஉச்சமான வெளிப்பாட்டு வடிவமாகவே தென்படுகிறது என்றும் அது குறித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகை அறிவுறுத்தல்களை மீளப்பெறக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால், ஜனாதிபதிக்கும், துறைசார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.



புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 188 இன் 16 ஆம் பிரிவின் கீழ், வடக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களின் நான்கு பூர்வீக மதத்தலங்களை

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 13ஐ அசல் வடிவில் நடைமுறைப்படுத்துக

ஏற்கனவே 1988 இல் பாராளுமன்றத்தில் 5/6 பெரும்பான்மையுடன் 13ஆவது திருத்தம் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டது.

அன்றிலிருந்து நாடு முழுவதிலும் மாகாண சபைகள் நிறுவப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்தலை நடத்துவதற்காகக் கலைக்கப் படும் வரை செயல்பட்டன.

எனவே ஏற்கனவே இருக்கின்றதானதும் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருப்பதையும் நடைமுறைப்படுத்துவதற்கு கருத்துக்களை கோர வேண்டிய அவசியமில்லை.

எவ்வாறாயினும், 13ஆவது திருத்தின் கீழ் வழங்கப்பட்ட சில மாகாண சபை அதிகாரங்கள் திட்டமிட்ட வகையில் காலத்திற்கு காலம் அவ்வப்போது திரும்பப் பெறப்பட்டன.

மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்ட அவ் அதிகாரங்களை மீண்டும் வழங்கி, காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தத்தை அதன் அசல் வடிவில் நடைமுறைப் படுத்த நாங்கள் முன்மொழிகிறோம் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆண் விபசாரி என்றதால் சபையில் சலசலப்பு

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்த இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க

"தனியார் ஊடகம் ஒன்று கடந்த காலங்களில் எனக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டது. பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அந்த ஊடகம் அழைக்கப்பட்ட போது தவறை ஏற்றுக்கொண்டது. அந்த தனியார் ஊடகத்தை போன்று பாராளுமன்றத்தில் ஆண் விபச்சாரி ஒருவர் செயற்படுகிறார்.

கட்சி தலைவராகும் நோக்கத்தில் இருந்து கொண்டு செயற்படும் அவர் பாராளுமன்றத்தில் ஆண் விபசாரி போல் செயற்படுகிறார். ஆகவே அந்த ஆண் விபசாரி எம்மை குழப்பிக் கொள்ளக் கூடாது" என்றார்.

இராஜாங்க அமைச்சரின் இந்தக்கருத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம்,

"இராஜாங்க அமைச்சருக்கு உரிய பாராளுமன்ற உறுப்பினருடன் தனிப்பட்ட முரண்பாடுகள் இருக்கலாம். அதை அவர் முறையாக அணுக வேண்டும். அதை விடுத்து பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற வார்த்தைகளை பிரயோகிப்பது முறையற்றது. பாராளுமன்ற கலரியில் பாடசாலை மாணவர்கள் அமர்ந்துள்ளார். இவ்வாறான வார்த்தைகளை பிரயோகிப்பது முறையற்றது. சபைக்கு தலைமை தாங்கும் பிரதி சபாநாயகர் இவ்வாறான முறையற்ற வார்த்தை பிரயோகங்களுக்கு இடமளிக்கக்கூடாது" என்றார்.

இதன்போது எழுந்த தேசிய சுதந்திரமுன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச, "இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் ஆண்விபசாரி உறுப்பினர் என்று குறிப்பிட்டார். 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் யார் அந்த ஆண் விபசாரி உறுப்பினர் என்று மக்கள் கேள்வி எழுப்புவார்கள். எனவே இந்த சபையில் ஆண் விபசாரி உறுப்பினர் இருந்தால் அவர் யார் என்பதனை அவர் வெளிப்படையாக குறிப்பிட வேண்டும் என்றார்.

## பொதுப் போக்குவரத்தில் மின்சார பஸ்கள் அறிமுகம்

இலங்கையின் பொதுப் போக்குவரத்துத் துறையில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, தேசிய போக்குவரத்துக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், பொதுப் போக்குவரத்து சேவையில் ஒருங்கிணைந்த நேர அட்டவணைகள் மற்றும் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே ஆகியோரின் பங்குபற்றுலுடன் இது தொடர்பான கலந்துரையாடல் திங்கட்கிழமை (07) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பயணிகள் போக்குவரத்து துறையில் காணப்படும் நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் செயற்திறனின்மையால் பயணிகள் மற்றும் பஸ்உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டதுடன், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்துத் துறையில் உயர் தரத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

## சிறையிலுள்ள 56 மதகுருக்களில் 48 பேர் பௌத்த பிக்குமார்

2023 ஜூன் 1 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் பல்வேறு குற்றச் சாட்டுக்களின் கீழ் 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்களில் 29 பௌத்த பிக்குகள் கைதிகள் என்ற அடிப்படையிலும், 19 பௌத்த பிக்குகள் சந்தேகத்தின் அடிப்படையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் 20 பௌத்த பிக்குகளும், பெண் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டில் 3 பௌத்த பிக்குகளும் சிறையில் உள்ளார்கள். அத்துடன் மனித படுகொலை குற்றச்சாட்டில் 2 பௌத்த தேரர்களும். நிதி மோசடி குற்றச்சாட்டில் 2 தேரர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 3 பௌத்த பிக்குகள் சிறையில் உள்ளனர்" என்றார்.

## ஊடகங்களுக்கு எதிராக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க நடவடிக்கை

அமைக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்தே இவ்வாறு குற்றம்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில், "நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக விவசாய பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டு வருவதால், ஒரு வாரத்துக்கு நீரை அந்தந்த பிரதேசத்தில் இருக்கும் நீர்த்தேக்கங்களில் இருந்து விநியோகிக்குமாறு விவசாயிகள் கேட்டனர். ஆனால் அரசாங்கம் அதனை நிராகரித்தது. பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க முடியும் எனவும் விவசாயிகளுக்கு நீரை வழங்கி 3 மணி நேரம் மின்சாரத்தை துண்டிக்க முடியாது எனவும் விவசாயம் பாதிக்கப்படுவதன் மூலம் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது" என்றார்.

## கணக்காளர் பலி புகையால் மாணவர்கள் சுகயீனம்

கனேமுல்லையைச் சேர்ந்த 50 வயதான கணக்காளரே உயிரிழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளதுடன், தீப் பரவலின் போது அவர் களஞ்சியசாலைக்குள் இருந்ததாகவும், இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சுத்திகரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் தயாரிக்கும் இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ முற்றிலுமாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

கம்பஹா மற்றும் நீர்கொழும்பு தீயணைப்பு பிரிவினர் மற்றும் இலங்கை கடற்படையினர் இணைந்து தீயை அணைக்க உதவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் ஏற்பட்ட புகை காரணமாக இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் ராகம வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

## திருத்தங்களை அமலாக்க மக்கள் வாக்கெடுப்பு தேவை

மக்கள் வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும் என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) அறிவித்தார்.

உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "பிரதேச சபைகள் (திருத்தம்)", "நகர சபைகள் (திருத்தம்)" மற்றும் "மாநகர சபைகள் (திருத்தம்)" எனும் மூன்று சட்ட மூலங்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபைக்கு அறிவிக்கும்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் அறிவிக்கையில், "அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'பிரதேச சபைகள் (திருத்தம்)' 'நகர சபைகள் (திருத்தம்)' மற்றும் 'மாநகர சபைகள் (திருத்தம்)' எனும் மூன்று சட்டமூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது என்றார்.

## 5 இடங்கள் இந்தியாவுக்கு

பாராளுமன்றத்தில் செவ்வாய்கிழமை (08) விசேட கூற்றொன்றை முன்வைத்து உருயற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், " இந்தியாவுக்கு அண்மையில் விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார். ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை தொடர்ந்து திருகோணமலை, காங்கேசன்துறை, பலாலி விமான நிலையம் ஆகியனவற்றை இந்தியாவுக்கு வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன

பாராளுமன்றத்தில் உள்ள தெரிவுக்குழுக்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எவரும் உள்ளடங்கப்படாததால் இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்ப எமக்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் பாராளுமன்ற விவாதம் ஒன்று வேண்டும்.

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர்கள் எவரும் பங்குப்பற்றுவதில்லை. நாட்டில் உள்ள அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. பாராளுமன்றத்தை பலப்படுத்துவதாக ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் இந்தியாவுடனான ஒப்பந்தம் குறித்து இதுவரை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வில்லை" என்றார்.

## பழைய விமானங்கள் மூலம் பலி கொடுக்க முயற்சியா?

பாராளுமன்றத்தில் செவ்வாய்கிழமை (08) விசேட கூற்றொன்றை முன்வைத்து மேற்குறிப்பிட்ட கேள்வியை எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், திருகோணமலையில் திங்கட்கிழமை விமானப் பயிற்சியின்போது இடம்பெற்ற விமான விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளார்கள்.

அருங்காட்சியத்தில் வைக்கப்பட வேண்டிய விமானத்தில்தான் இவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். விபத்துக்குள்ளான விமானம் 1958 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. விமானத்தின் இயந்திரம், 1961 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனை நிர்மாணிக்கும்போது, நான் பிறக்கக் கூடவில்லை. பி.டி. 6 எனும் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 6 விமானங்கள், விமானிகளின் பயிற்சிக்காக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான வின் கொமாண் டர் தரிந்து ஹேரத் எனும் விமான பயிற்சி ஆலோசகரும், அலவ்வ பகுதியைச் சேர்ந்த பயிற்சி விமானியான பெசான் வர்ணசூரிய என்பவருமே விபத்தில் உயிரிழந்துள்ளார்கள். இவர்களின் மரணத்திற்கு யார் காரணம்?

இதுபோன்று 6 பேர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார்கள். இதற்கு யார் பொறுப்பு என்பதை அரசாங்கம் கூற வேண்டும். கிபீர் விமானங்களை புதுப்பிக்க 55 மில்லியன் டொலரை அரசாங்கம் செலவு செய்தது.

ஆனால், இந்த விமானத்தின் பெறுமதி 0.75 மில்லியன் டொலர்தான். இவ்வாறு இருக்கையில், பழைய விமானங்களை பயன்படுத்தி இன்னமும் உயிர்களை பலி கொடுக்க அரசாங்கம் முயல்கிறதா? நாட்டில் விமானிகள் இவ்வாறு உயிரிழப்பது மிகவும் துரதிஷ்டவசமானது.

விமானப்படை விமானிகளின் பயிற்சிகளுக்கு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டிய விமானங்களைப் பயன்படுத்துவதே உயிரிழப்புக்களுக்கு காரணம்" என்றார்.

## மின் பிறப்பிக்கும் அலகு பழுதடைந்தது

இதேவேளை, நாட்டில் தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான திட்டம் எதுவும் இல்லை எனவும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியான மின்சார விநியோகத்திற்கு தேவையான மேலதிக மின்சாரத்தை மின்சார சபை வழங்கும் எனவும் மின்வெட்டு ஏற்படும் என வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## துப்பாக்கி சூட்டில் இளம் தம்பதி பலி

திருமணமாகி எட்டே மாதங்களான என்டன் தாஸ் (வயது 32) மற்றும் நாதன் ரீட்டா (வயது 32) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுவடைந்ததை அடுத்து கணவரினால் மனைவி சுட்டு கொலை செய்யப்பட்டதன் பின்னர். கணவன் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பான என்டன்தாஸின் தாயாரின் வாக்குமூலமானது, "நான் எனது மகன் மற்றும் மருமகளுடன் தனியான வீட்டில் வசித்து வருகின்றோம் திங்கட்கிழமை இரவ 10.30 மணியிருக்கும் எனது மகனுக்கும் மருமகளுக்கும் இடையே முரண்பட்டு வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. நான் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன்.

சமையல் அறையில் பாரிய வெடிப்பு சத்தம் கேட்டது நான் சமையல் அறைக்குள் சென்று பார்த்தபோது மருமகள் குருதி தோய்ந்த நிலையில் நிலத்தில் சரிந்து காணப்பட்டார்.

மகனிடன் ஏன் என கேட்டப்போது மின்சாரம் தாக்கி கீழே விழுந்து கிடக்கின்றாள் யாரையாவது உதவிக்கு அழைக்குமாறு கூறினார். நான் அயலவர்களை கூப்பிடுவதற்காக வீட்டில் இருந்து வெளியே வரும்போது மீண்டும் ஒரு வெடிப்பு சத்தம் கேட்டது வீட்டினுள் சென்று பார்த்தால் மகனும் குருதி தோய்ந்த நிலையில் நிலத்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்து காணப்பட்டார் என்று தெரிவித்தார்.

## மனித புதைகுழி அகழ்வுக்கு அரச நிதி

அதனையடுத்து, அடுத்த கட்ட விசாரணையை எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறும் என்று நீதிபதி அறிவித்தார்.

இந்த வழக்கு விசாரணையில் கலந்து கொண்ட சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுக்கு ஜனாபத பிரிவில் இருந்து நிதி கிடைக்க இருப்பதாக காணாமல் போனோர் அலுவலகம் தெரிவித்துள்ளது என்றும் தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்கத்தின் பிரதிநிதிகள் சேர்ந்து 10 ஆம் திகதி சந்தேகத்திற்கு இடமான பிரதேசத்தினை அளவிட்டு அதற்கான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் அகழ்வுப்பணிக்கான திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் தொல்பொருள் திணைக்களம் முன்னிலையாகாத நிலையில் வியாழக்கிழமை (08) பார்வையிட்டு மூன்று வார கால அவகாசம் கோரி விடயங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதிமன்றுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டார்.

## வலிந்து ஆக்கிரமிக்கும் அதியுச்ச வெளிப்பாடு

புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள 2023.02.01 ஆம் திகதிய 2317ஃ57 ஆம் மற்றும் 2317ஃ58 ஆம் இலக்க வர்த்தமானிகளையே மீளப்பெறுமாறு, திங்கட்கிழமை (07) திகதியிட்ட கடிதத்தை அனுப்பியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் வதிவிடப் பிரதிநிதி, சர்வதேச நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், யுனெஸ்கோ மனித உரிமைகள் ஆணையகம் என்பவற்றுக்கு பிரதியிட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பறாளை முருகன் ஆலயம் உள்ளிட்ட குறித்த நான்கு இடங்களும் இன்றளவும் முறைசார் பூஜை வழிபாடுகள் இயற்றப்படும் தமிழ் மக்களுடைய புராதன மதவழிபாட்டுத் தலங்களாகப் பேணப்பட்டு வரும் நிலையில், எமது மக்களை உணர்வுரீதியான நெருக்கீடுகளுக்கு ஆளாக்கி இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளைத் தூண்டும் நோக்கோடு மேற்படி மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தியுள்ளமை தமிழர்களது பூர்வீக நிலங்களை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வதன் அதிஉச்சமான வெளிப்பாட்டு வடிவமாகவே தென்படுகிறது.

குறிப்பாக பறாளை முருகன் ஆலய பரிபாலன சபையினரிடமுள்ள 1786 ஆம் ஆண்டு எழுதப்பட்ட காணி உறுதியில் அவ் ஆலய வளாகத்தினுள் அரசமரம் இருப்பதாகக் குறித்துரைக்கப்பட்டி ருக்கவில்லை.

ஓ.எம்.பி அலுவலகம் அழைத்து

# “வேடிக்கை பார்க்கின்றது”

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஓ.எம்.பி) தொடர்ந்தும் அவர்களின் உறவுகளை அழைத்து அலைய விட்டு வேடிக்கை பார்ப்பதாகவும் குறித்த நடவடிக்கையினை வன்மையாக கண்டிப்பதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

-மன்னாரில் செவ்வாய்க்கிழமை (8) காலை 10 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஓ.எம்.பி) எங்களுக்கு தேவை இல்லை என்று ஆரம்பத்தில் கூறி வந்தோம். எனும் குறித்த அலுவலகத்தை கொண்டு வந்து விட்டார்கள் என்பதற்காக நாங்கள் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின்



விவரங்கள் ஓ.எம்.பி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டோம்.

ஆனால் பதிவுகளை மேற்கொண்டும் எவ்வித நன்மையும் இல்லை. உயிர்களை உறவுகளையும் தேடி அலைந்து கொண்டு இருக்கின்றனர் அம்மாக்கள்.

ஆனால் ஓ.எம்.பி அலுவலகத்தினால் கடிதத்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.எங்களுக்கு எந்த வித கடிதமும் தேவை இல்லை என ஓ.எம்.பி அதிகாரிகளிடம் தெரிவித்து கொள்கிறேன்.

எங்களுக்கு காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளே வேண்டும். இந்த நிலையில் தொடர்ந்தும் எங்களுக்கு கடிதங்களை அனுப்பி எங்களை குழப்பத்திற்கு உள்ளாக்குகிறார்கள்?, அலுவலகர்களாகிய நீங்கள் அரசாங்கத்திடம் சம்பளம் வேண்டி வேலை செய்கின்றீர்கள்.

.எங்களுக்கு இனி எந்த கடிதத்தையும் அனுப்பாதீர்கள்.இக் கடிதத்தினால் எங்களுக்கு எவ்வித நன்மைகளும் இல்லை. நாங்கள் கடிதம் வேண்டாம் என்று சொல்கின்றோம். பல்வேறு துயரங்களுடன் வாழ்ந்து வரும் அம்மாக்களை அழைத்து அவர்களை அலைய விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள் என்றார்.

# ஆணுறுப்பை பெண்ணுக்கு காட்டியவர் கைது

பாறுக் ஷிஹான்

குடும்ப பெண் ஒருவருக்கு ஆணுறுப்பை வட்அப்ஸ் செயலியின் ஊடாக காட்டி தையல் இயந்திரம் உட்பட சலுகைகள் பல தருவதாக கூறி பாலியல் தொந்தரவு மேற்கொண்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற 2 பிள்ளைகளின் தாயான குடும்ப பெண்ணிடம் பல சலுகைகளை பெற்று தருவதாக ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார்.

தனது ஆணுறுப்பை புகைப்படம் எடுத்து குடும்ப பெண்ணின் வட்அப்ஸ் செயலியின் ஊடாக குடும்ப பெண்ணின் கைத்தொலைபேசிக்கு தொடர்ச்சியாக அனுப்பி பாலியல் சேட்டை செய்து வந்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடு ஒன்று திங்கட்கிழமை (07) கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம். ஐயூப் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரான 41 வயது மதிக்கத்தக்க சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

மேலும் சந்தேக நபரான சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பல்வேறு திருமணங்கள் மேற்கொண்டுள்ளதுடன் இவ்வாறு பல்வேறு கணவன் அற்ற பெண்கள் மற்றும் தனிமையில் உள்ள பெண்களை நாடி தனது இச்சைக்காக ஆசை வார்த்தைகளை கூறி பாலியல் இலஞ்சம் பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரை நாளை (08) கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நீரின் மட்டம் குறைந்து வருகிறது

செ.தி.பெருமாள்

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவுவதால் இப் பகுதியில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

குறிப்பாக மவுசாகல, காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன் லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 49 அடி குறைந்த உள்ளது என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



கடும் வெப்பம் நிலவுவதால் இப் பகுதியில் குடி நீர் தட்டுபாடு நிலவிவருகிறது. குறிப்பாக பெருந்தோட்ட பகுதிகளில் சுத்தமான குடிநீர் பெற்று கொள்ள முடியாத நிலையில் உள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து இவ்வாறான காலநிலை தொடரும் பட்சத்தில் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் வேலை இன்றி தவிக்கும் நிலை உருவாகலாம்.

# தேங்காய் பறித்த குடும்பஸ்தர் தவறி விழுந்து மரணம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



தென்னை மரம் ஏறி தேங்காய் பறித்த கூலித் தொழிலாளியான குடும்பஸ்தர் பிடி நழுவி மரத்திலிருந்து தவறி விழுந்து மரணமடைந்துள்ள சம்பவம் இளநிலா குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஞாயிறு(06) மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் முழங்காவில் அன்புபுரம் கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய குணராசா ஞானரூபன் என்பவர் மரணடைந்துள்ளார்.

சம்பவதினத்தன்று கூலிக்குத் தேங்காய் பறிப்பதற்காக இளநிலா குடியிருப்புப் பகுதியிலுள்ள தென்னை மரத்தில் இவர் ஏறிய பொழுது தென்னை மரத்தில் குளவிக் கூடுகளை அவதானித்துள்ளார்.

குளவிக் கூடுகளைக் கண்ட மாத்திரத்தில் சடுதியாக இறங்க முற்பட்ட அவர் தென்னை மரத்திலிருந்து பிடி நழுவி தென்னை மரத்தின் கீழே பூமரக்கன்றில் விழுந்துள்ளார். அந்நேரம் கீழே இருந்த பூக்கன்றின் தடி இவரின் விலாப் பக்கத்தைத் துளைத்துக் கொண்டு உடலில் புகுந்துள்ளது.

அதனால், அலறியவரின் குரல் கேட்டு உதவிக்கு விரைந்தோர் ஓடிச்சென்று அவரை முழங்காவில் வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். எனினும் அவர் அதிக இரத்தப் போக்கு காரணமாக ஏற்கெனவே இறந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் உடற் கூராய்வுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பரிசோதனைகள் முடிவுற்ற பின்னர் உறவினர்களால் செவ்வாய்க்கிழமை 08.08.2023 அடக்கம் செய்யப்பட்டது.

# வீட்டின் மீது தாக்குதல்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரியின் வீட்டுக்கு மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறை கும்பல் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டு பெட்ரோல் குண்டை வீசிவிட்டு தப்பிச்சென்றுள்ளது.

கருகம்பனை பகுதியில் உள்ள அதிகாரியின் வீட்டுக்கு திங்கட்கிழமை (07) மோட்டார் சைக்கிளில் சென்ற வன்முறை கும்பல் , வீட்டின் கதவை கொத்தி உடைக்க முற்பட்டதுடன் , ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து உடைத்து விட்டு, ஜன்னல் ஊடாக பெட்ரோல் குண்டை வீட்டினுள் வீசி விட்டு தப்பி சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நாய் கடித்ததில் நால்வர் காயம்

எம்.எஸ்.எம். நூர்தீன்

காத்தான்குடி, புதிய காத்தான்குடி அப்ரார் பிரதேசத்தில் திங்கட்கிழமை (07) விஷர் நாய் கடித்ததில் நான்கு பேர் காயமடைந்து , மூன்று பேர் காத்தான்குடி தள வைத்தியசாலையிலும் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய காத்தான்குடியில் வீடொன்றில் வளர்த்து வரும் விஷர் நாயொன்று இவ்வாறு கடித்துள்ளது.இதையடுத்து குறித்த நாயினால் இப்பகுதியில் வசிப்பவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் காத்தான்குடி நகர சபை மற்றும் சுகாதார அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

# மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர்

எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் வழங்குவதற்கு 21 இலட்சத்தி 88 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் செவ்வாய்க்கிழமை (07) தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரமவின் ஆலோசனைக்கமைய வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, மகாஓயா லகுகல, திருக்கோவில், ஆலையடிவேம்பு, பதியத்தலாவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்பட்டுள்ள வரட்சியினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்

# விபத்தில் சிக்கிய இளைஞன் சிச்சை பலனின்றி உயிரிழப்பு

எஸ் தில்லைநாதன்

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

துன்னாலை மத்தி, கோயில்கடவையைச் சேர்ந்த சங்கர் சஞ்ஜீவன் என்ற 20 வயதுடைய இளைஞரே இவ்வாரு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த ஜுலை (01) திகதி இரவு மோட்டார் சைக்கிள் பழக முயன்றபோது மோட்டார்சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானார். தலைக்கவசம் அணியாத நிலையில் படுகாயமடைந்த இளைஞர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் திங்கட்கிழமை (07) காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (துளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு கட்டவும்

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்த வண்ணமே உள்ளன. உலகில் எங்கோ ஒரு மூலையில்ஒவ்வொரு நொடிக்குள் ஒரு பெண் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுகின்றார். இல்லையேல் துன்புறுத்தப்படுகின்றார், இன்றேல், பலியெடுக்கப்படுகின்றார்.

உலகின் பல நாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் செய்திகளைப் பார்க்குமிடத்து, மிகப் பயங்கரமான வன்முறைகள் பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அண்டைய நாடான இந்தியாவில் அவ்வாறான செய்திகளுக்கு குறைவே இல்லை. மணிப்பூர் சம்பவம் தொடர்பிலான காட்சிகள் மனங்களில் இருந்து இன்னுமே அகலவில்லை.

பெண்கள் மட்டுமன்றி, சிறுவர்கள், சிறுமிகள் மீதான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. இவ்வற்றில் பெரும்பாலான சம்பவங்கள் உறவினர்களால் அல்லது அந்தக் குடும்பத்தினரால் நன்கு அறியப்பட்டவர்களாலேயே அரங்கேற்றப்படுகின்றன.

வீட்டுக்கு வெளியே, பொதுப் போக்குவரத்து, வேலைத் தளங்கள், காரியாலயங்களில் பெண்களுக்கு எதிரான சீண்டல்கள், சேஷ்டைகளுக்கு குறைவே இல்லை. தங்களுடைய பயணப்பொதி, அதிலிருக்கும் பணம் மற்றும் அலைபேசி என்பவற்றுக்கு அப்பால், அங்கங்களையும் தற்காத்துக் கொள்ளவேண்டிய நிலைமைக்குள் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில்தான், சட்டவாக்கமான இலங்கையின் அதியுயர் பீடங்களில் ஒன்றான பாராளுமன்றத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. அதுதொடர்பில், சபைக்குள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய வேலைக்கு ஆப்பு விழுந்துவிடும் என்ற அச்சத்தில் பெரும்பாலான பெண்கள், தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியை மூடி மறைத்து வைத்துள்ளனர். ஆக, அவர்களுடைய தொழிலுக்கு உத்தரவாதமளிக்கும் வகையில், விசாரணைகளை முன்னெடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையிலும் அடுத்தவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும் வகையிலும் விசாரணைகளை முன்னெடுத்து தீர்மானம் எடுக்கவேண்டும்.

இதற்கிடையே வீட்டு வன்முறைகள், காதல், குரோதங்கள் உள்ளிட்டவையால் முன்னெடுக்கப்படும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. அதனால், பலரும் உயிர்களை இழந்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை சந்தேகத்தால் ஏற்பட்ட விளைவாகவே இருக்கும்.

குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை வன்முறைகளின் ஊடாக தீர்க்கமுடியாது. இது முழுக் குடும்பத்தையும் நிர்க்கதியாக்கிவிடும். வீட்டுப் பிரச்சினைகளை கலந்துபேசி நான்கு சுவர்களுக்கு உள்ளேயே தீர்த்துக்கொள்வதற்கு தம்பதிகள் முயற்சிக்கவேண்டும்.

குடும்ப உறவுக்குப் பின்னால், முறையற்ற காதல் தொடர்பிலான பல குடும்பங்கள் சின்னா பின்னமாகிவிடுகின்றன. அதற்கு அலைபேசியும், அலைபேசி காதலும் பிரதான பங்கை வகிக்கின்றன.

பெண்களும் வாழப் பிறந்தவர்கள், அவர்களுக்கு நிம்மதியாக, சுதந்திரமாக வாழும் உரிமை உண்டு என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொண்டால், பெண்கள் மட்டுமல்ல சிறுவர்கள், சிறுமிகளும் நிம்மதியாக வாழ்வார்கள். இவர்களுக்கு எதிராக செயற்படுவோருக்கு எதிராக வழங்கப்படும் தண்டனை மற்றோருக்கு ஒரு பாடமாக அமையவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மேகம் கருமையாகும்; பின்னர், அதுவே ஒரு சில நேரங்கள் செல்ல, வெளுத்து, வானம் நீலநிறமாகி விடும். இதுபோலவே மானிட வாழ்க்கையும்.

சில பொழுது கவலை; அடுத்து மகிழ்ச்சி, சின்னச் சின்ன அதிர்வுகள். அதுபோய்விட, நகைச்சுவை பேச்சுகள்; நண்பர்கள், உறவினர்களுடன் அரட்டை.

குடும்பங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருப்பர். சகலருக்கும் மனம் மாறிமாறிப் புரளும். இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுவே நல்லது. மீண்டும் அவர்களே திரும்பி வருவார்கள்.

சின்னக் காரியங்களைப் பெரிதாகக் கருதலாகாது. நாங்களும் அவர்களில் ஒருவர் அல்லவா! எனவே, எவரையும் ஒதுக்குவது கூடாது.

தவறு செய்தல், கோபித்தல், ஒதுங்கி நடத்தல், கண்டபடி ஒருவரைச் சீண்டுதல் இவை எல்லாம் நடந்துகொண்டே இருக்கும்.

மிருகங்களுக்கும் உணர்வு உண்டு. ஒருகணம் ஓடிப்பிடிக்கும் சுபாவமும் மறுகணம், கத்திச் சண்டை செய்வதும் இயல்பானது. இவை உயிரினங்களின் இயல்பு.

எனவே மனஸ்தாபப்படுவதும் பின்னர், ஒன்றிணைவதும் உயிரினங்களுக்கும் எமக்கும் உள்ள ஒற்றுமையாகும். உயிர் வாழ்வு ஒன்றேதான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இந்திய இலங்கை பாலம் சாத்தியமானதா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ரணில் விக்ரமசிங்க அதிகாரத்தில் இருக்கும் போது மூன்று முறை இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அந்த மூன்று முறையும் அவர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைத்து வாகன போக்குவரத்துக்கு வசதி செய்யவேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்துவிட்டு வந்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு 2ஆவது முறை பிரதமர் பதவியை ஏற்ற ரணில் 2002 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்று முதன்முதலாக இந்த பாலம் அமைக்கும் திட்டத்தை முன்வைத்தார். அடுத்து, 2015இலும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆனால் அந்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. கடந்த ஜூலை 20 , 21 ஆம் திகதிகளில் அவர் ஜனாதிபதியாக மீண்டும் புதுடெல்லிக்கு பயணம் மேற்கொண்டார். அப்போதும் பாக்கு நீரிணைக்கு குறுக்கே பாலம் அமைக்கும் திட்டத்தைப் பற்றி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி சில இணக்கப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டார்.

இம்முறை விஜயத்தின் போது இரு நாடுகளுக்கிடையே விமான, கப்பல் போக்குவரத்து மற்றும் மின்சார, எண்ணெய் குழாய் இணைப்புகள் பற்றியும் இணக்கம் காணப்பட்டது. இவற்றில் பாலம் அமைக்கும் திட்டமே மிகவும் சாத்தியம் குறைந்ததாகும். ஏனெனில் அதைப் பற்றி இலங்கையிலும் இந்தியாவிலும் பலரிடையே மாற்று கருத்துக்கள் நிவுகின்றன.

பாலம் அமைக்கும் திட்டம் தொடர்பாக இணக்கம் கண்டதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு இந்திய விஜயத்தின் இறுதியில் அறிக்கை மூலம் அறிவித்த போதிலும் எந்த இடத்தில் இந்த பாலம் கட்டப்படும் என்று கூறவில்லை. ஆனால் இந்த விடயம் ஏற்கெனவே இரண்டு முறை இராஜதந்திர ரீதியாக ஆராயப்பட்ட விடயம் என்பதாலும் அப்போதெல்லாம் அது தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே அமைக்கப்படும் என்று கூறப்பட்டதாலும் இதுவும் அதே திட்டமாகத் தான் என்பதில் சந்தேகம் இல்லை.

கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட தகவல்களின் படி தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள சுண்ணாக்கல் தொடரின் மீதே இந்த பாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இராவணனால் சீதை இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட போது அவளை மீட்க வந்த இராமனுக்கு இந்து சமுத்திரத்தை கடக்க ஹனுமானின் வானரச் சேனையால் அமைக்கப்பட்ட பாலத்தின் எச்சங்களே இந்த சுண்ணாக்கல் தொடர் என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகும். எனவே, இந்தியர்களால் அது இராமர் பாலம், ஹனுமான் பாலம், இராம சேது,சேது போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் காலனித்துவ ஆட்சி காலத்தில் இதை ஆதாமின் பாலம் என்று அதனை அழைத்தனர். அண்மையில் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் மோஹன் குவாட்ரா, உத்தேச தரைத் தொடர்புத் திட்டத்தை இலங்கை ஜனாதிபதியே முன்வைத்தார் என்று கூறினார். ரணில் இவ்வாறான பாலம் அமைக்கும் திட்டமொன்றை 2002 இல்மேற்கொண்ட தமது இந்திய விஜயத்தின் போதே முதன்முதலில் முன்வைத்தார். இராமர் பாலத்தினூடாகவே அப்பாலம் அமைக்கப்படும் என்று அப்போதும் கூறப்பட்டது.

உண்மையில் இராமர் பாலம் எனப்படும் சுண்ணாக்கல் தொடர் மீது வாகன போக்குவரத்துக்கு உகந்த வகையில் பாலமொன்றை அமைக்கும் ஆலோசனையை முதன்முதலில் முன்வைத்தவர் ரணில் அல்ல. இது போன்றதொரு திட்டத்தை 1894 இல் , இந்தியாவையும் இலங்கையையும் ஆட்சி செய்த பிரித்தானிய காலத்துவ அரசாங்கம் முன்வைத்திருந்தது. அத்திட்டத்தை அவர்கள் Indo-Ceylon Bridge என்றே அழைத்தனர்.

அப்போது அது வெறும் காகிதத்தில் வரையப்பட்ட திட்டமாக மட்டும் இருக்கவில்லை. காலனித்துவ அரசாங்கம் உத்தேச பாலத்தின் இரு மருங்கிலும் ரயில் பாதைகளையும் நிர்மாணித்தது. இலங்கையின் கோடியில் தலைமன்னார் வரையிலும் இந்திய கோடியில் இராமேஷ்வரம் வரையிலும் ரயில் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டது. பாலம் அமைக்கும் திட்டம் ஏதோ ஒரு காரணத்தால் கைவிடப்பட்ட போதிலும் இந்த ரயில் பாதைகள் தொடர்ந்தும் பாவனையில் உள்ளன.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி இந்திய பிரஜா உரிமையை பெற்ற மலையக தமிழ் மக்கள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் செல்வதற்காக இந்த ரயில் பாதைகளையே பாவித்தனர். அவர்களுக்கு மலையக ரயில் நிலையங்களில் இருந்து தலைமன்னாருக்கு ரயிலில் செல்லவும் அதிலிருந்து கப்பல் மூலம் இராமேஷ்வரத்துக்குச் செல்லவும் அங்கிருந்து மண்டபம் வரை ரயிலில் செல்லவும் டிக்கெட் வழங்கப்பட்டது.

ஆங்கிலேயரின் Indo-Ceylon பாலம் நிர்மாணிக்கப்படாவிட்டாலும் அத்திட்டம் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் பிரபல்யம் அடைந்திருந்தது. அத்திட்டம் வரையப்படும் போது சிறுவனாக இருந்த பாரதியார் தமது சிந்து நதியின் மிசை என்ற கவிதைத் தொகுதியில் 'சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என்ற வரிகளைப் பாடியிருந்தார். குறிப்பிட்டதும், அக்கவிதைத் தொகுதி பின்னர் 1964 ஆம் ஆண்டு கை கொடுத்த தெய்வம் என்ற திரைப்படத்தில் ரீ.எம். சௌந்திரராஜன் பாடும் பாடலாக சேர்த்துக் கொள்ளப்பட்மையும் இதனை காட்டுகிறது. ஆனால் பிற்காலத்தில் இத்திட்டம் அரசியல் காரணங்களுக்காக இந்திய அரசியல்வாதிகளால், குறிப்பாக தமிழக அரசியல்வாதிகளால் சிலவேளை ஆதரிக்கப்பட்டும் சிலவேளை எதிர்க்கப்பட்டும் வந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு புலிகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட நிலையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவ்வருடம் ஜூன் 8- 12 ஆம் திகதி வரை இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். சுதந்திரத்துக்குப் பின்அப்போது தான் இந்த பாலம் அமைக்கும் திட்டம் முதன்முதலாக முன்வைக்கப்பட்டது. அந்த விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்தத் திட்டம் தொடர்பாக சாத்தியப்பாடு அறிக்கையொன்றை தயாரிக்க இரு நாட்டு தலைவர்களும் உடன்பட்டனர். அதற்காக இரு நாடுகளிலும் இரண்டு நிறுவனங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அப்போதும் இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியே நிலவியது. அப்போதைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய்க்கும் அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குமிடையே சுமுக உறவும் நிலவியது. எனவே ஜெயலலிதா இந்த திட்டத்தை எதிர்க்க இந்திய மத்திய அரசாங்கமும் இத்திட்டத்தை கிடப்பில் போட்டது.

2004 இல் இரு நாடுகளிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனையடுத்து இந்தியாவின் பிரதமராகிய கலாநிதி மன்மோகன் சிங் இத்திட்டத்தை புறக்கணித்துவிட்டு சேது சமுத்திரம் திட்டத்தை 2005 ஆம் ஆண்டு முன்வைத்தார். அது சேதுவின் தெற்கே உள்ள மன்னார் கடலையும் வடக்கே உள்ள பாக்கு நீரிணையையும் இணைக்கும் வகையில் சேதுவின் குறுக்கே 83 கிலோ மீட்டர் நீளமான கடல் கால்வாய் ஒன்றை தோண்டும் திட்டமாகும். இதன் மூலம் இந்தியாவின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள துறைமுகங்கள் இணைக்கப்படுவதாலும் வெளிநாட்டு கப்பல்களுக்கு இலங்கையைச் சுற்றிச் செல்லாமல் கிழக்கு இந்திய துறைமுகங்களுக்குச் செல்ல வசதி ஏற்படுவதாலும் இது பொருளாதார ரீதியில் இந்தியாவுக்கு மிகவும் பயனுள்ளதாகவே கருதப்படுகிறது.

எனினும் சேது சேதமாக்கப்படுவதால் பல இந்துக்களும், பாரதிய ஜனதாக் கட்சியினரும் பலத்த எதிர்ப்பை தெரிவித்தனர். அவ்விடயம் இந்திய உயர் நீதிமன்றம் வரை சென்று இராமாயணம் உண்மையானதா என்றெல்லாம் நீதிமன்றத்தில் வாதிடும் நிலைக்கு சென்றது.

இதனிடையே மீண்டும் பிஜேபியும் ஐதேகவும் இரு நாடுகளிலும் பதவிக்கு வந்த நிலையில் பிரதமர் மோடி 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு வந்து பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பாரதியாரின் கவிதையை நினைவூட்டி பாலத்தையும் நினைவூட்டினார். இந்தியா ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அதற்காக 5.1 பில்லியன் டொலர் கடனைப் பெறவும் தயாராகியது. 2015 ஆண்டு செப்டம்பரில் பிரதமர் ரணில் மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது மீண்டும் அத் திட்டம் ஊடகங்களில் மேலேழுந்து வந்தது. ஜெயலலிதாவும் அமைதியாக இருந்தார். ஆனால் ஐதேக அரசாங்கம் தோல்வியடையவே இத்திட்டமும் மறைந்தவிட்டது. இப்போது மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இது இரு நாடுகளுக்கும் மிகவும் பயனுள்ள திட்டம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் இதனால் இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று இலங்கையின் பெரும்பான்மை தேசியவாதிகள் கருதுகின்றனர். அதேவேளை இந்தியாவுக்கு சேது சமுத்திர திட்டமே கூடுதல் பயனளிக்கக் கூடியதாகும். எனவே பாலம் அமைவதானால் பெரும் சவாலுக்கு மத்தியிலேயே அமைய வேண்டியுள்ளது.

## கடிதங்கள்

### பத்தினி புரம்:

### குப்பை மேடு பிரச்சினையை தீர்க்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்தின், தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட பாலம்போட்டாறு பத்தினிபுரம் மக்களின் தீர்த்து வைக்கப்படாத குப்பை மேடு பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் அமைந்திருக்கும் பாலம்போட்டாறு குப்பைமேட்டுக்கு, பல இடங்களிலிருந்து கொண்டுவரும் குப்பைகளை, வீதியோரத்தில் கொட்டுவதால், யானைகளில் தொந்தரவுகள் அதிகரித்து வருவதோடு, துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக, பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "பாலம்போட்டாறு பத்தினிபுரம் பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் குப்பை மேடு அமைந்துள்ளது. இதனால் வீசுகின்ற துர்நாற்றம் காரணமாக, பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் அப்பகுதியில் வசிப்போரும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள். குப்பை மேட்டிலிருந்து, பத்தினிபுர கிராமத்துக்கு 200 மீட்டர் தூரம் உள்ளது. பகல் நேரங்களில் வரும் காட்டு யானைகள், இரவு நேரங்களில் கிராமத்துக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துகின்றது. பல தடவைகள் பிரதேச சபைக்கு அறிவித்தும், இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை" என்றார்.

எனவே, இப்பகுதி மக்களின் நலன் கருதி, விரைவில் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதிக்கப்படும் பத்தினிபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப். முபாரக்



# தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் தேவை

**அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இந்நாட்டின் ஆடை ஏற்றுமதியில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும், தற்போதைய சூழ்நிலையை சமாளித்து புதிய உத்திகள் மூலம் தீர்வுகளை வழங்க வேண்டும் என ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF) தெரிவித்துள்ளது. குறிப்பாக, ஆடை Orders குறைந்து வருவதால், சில பெரிய ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள், தங்கள் சேவைத் திறனை அதிகரிக்கவும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும், தங்கள் தொழிற்சாலைகளின் திறனைக் கட்டுப்படுத்துதல், அந்த நிறுவனங்களுக்கு சொந்தமான வேறு தொழிற்சாலைகளுக்கு ஊழியர்களை இடம் மாற்றுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF) கூறுகிறது.**

இந்த நாட்டில் ஆடைத் துறையின் சவாலான மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணிகளின் அடிப்படையில், துறையின் முன்னேற்றத்திற்காக நிலையான நிர்வாக முடிவுகள் எட்டப்பட்டன. எந்தவொரு பெரிய நிறுவனமும் இலங்கையை விட்டு வெளியேறவோ அல்லது அந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் வலியுறுத்தியுள்ளது. மேலும், இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற புதிய சந்தைகளில் நுழைய, நாம் உடனடியாக சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று மன்றம் வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்கள் சில சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் பிரதித் தலைவர் ஃபீலிக்ஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "சர்வதேச Orderகளின் குறைவினால், ஆடைகளுக்கான தேவை சுமார் 25%ஆல் குறைந்துள்ளது, மேலும் இந்த நிலையை மேம்படுத்த அனைத்து சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களும் தங்களால் இயன்றவரை முயற்சித்துள்ளன. மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் வேலை இழப்புகள் பற்றிய சரியான தரவு எங்களிடம் இல்லை, ஆனால் அனைவரையும் பாதித்துள்ள இந்த நிலைமையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வர அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம் என்று சொல்லலாம். சில நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருப்பது உண்மைதான். மேலும், சில நிறுவனங்கள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வேலை செய்து மாத சம்பளம் கொடுக்கின்றன. தொழிலாளர் ஆணையாளரின் ஒப்புதலைப் / அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் ஊழியர்களுக்கு தற்காலிகமாக கோவிட் காலத்திலும் நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்ட காலத்திலும் சம்பளத்தில் 50% வழங்கப்பட்டது." என தெரிவித்தார்.



> **"சர்வதேச Orderகளின் குறைவினால், ஆடைகளுக்கான தேவை சுமார் 25%ஆல் குறைந்துள்ளது, மேலும் இந்த நிலையை மேம்படுத்த அனைத்து சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களும் தங்களால் இயன்றவரை முயற்சித்துள்ளன. மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் வேலை இழப்புகள் பற்றிய சரியான தரவு எங்களிடம் இல்லை**

> **வணிகர்கள் வழங்கும் Ordersகளின் தொகை 15% - 20% வீதத்தினால், குறைந்துள்ளதாகவும், இந்நிலைமை நாட்டின் ஏற்றுமதியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் ஆடைத் தொழில்துறைக்கு பொற்காலமாக அமைந்தது**

ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் உப தலைவர் ஃபீலிக்ஸ் பெர்னாண்டோ மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பாதிப்பில் இருந்து முற்றாக விடுபடவோ அல்லது அதனைக் கட்டுப்படுத்தவோ சம்பிரதாயப்பூர்வமான நடவடிக்கை திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். 2023 இல் முடிவடைய இருக்கும் GSP+ முன்னுரிமை வரிச் சலுகை மேலும் நீடிப்பு, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்படும் ஆடை ஒதுக்கீட்டை கணிசமான மதிப்பில் அதிகரிப்பது மற்றும் சீனா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற புதிய சந்தைகளுக்குள் நுழைவதற்கு வசதியாக, அந்த நாடுகளுடன் தாமதிக்காமல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். மேலும், புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து சக்தி உற்பத்தி செய்வதன் மூலம் செலவைக் குறைத்தல், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைத்தல், அரசாங்க செலவினங்களைக் குறைத்தல் மற்றும் நேரடி வரி வருமானத்தை அதிகரித்தல், இலங்கையின் மீட்சி போன்ற முன்மொழிவுகளை துரிதப்படுத்துதல்,பொருளாதாரம், வங்கி வட்டி விகிதம் மற்றும் பணவீக்கத்தை மீண்டும் குறைந்த நிலைக்கு கொண்டு வருவது போன்ற மேக்ரோ பொருளாதார ஸ்திரப்படுத்தல் திட்டங்களின் மூலம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் நிலவும் பணவீக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்நாட்டில் உள்ள ஆடை உற்பத்தியாளர்களுக்கு அந்நாடுகளில் வணிகர்கள் வழங்கும் Ordersகளின் தொகை 15% - 20% வீதத்தினால், குறைந்துள்ளதாகவும், இந்நிலைமை நாட்டின் ஏற்றுமதியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் ஆடைத் தொழில்துறைக்கு பொற்காலமாக அமைந்ததுடன், 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடிந்தது, தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுத்து, இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் இவ்வருடம் சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரால் குறையக்கூடும் என ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் உப தலைவர் ஃபீலிக்ஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்த நிலை 2023 இறுதிக்குள் சாதகமான நிலையை எட்டும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

# அமைச்சரவை முடிவுகள் சில

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில். 2023.08.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில




### 01. இலங்கையின் தேசிய கொள்கை.

பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்புக்களை தடுப்பதற்காக சர்வதேச தரக்கட்டளைகளை தயாரிக்கின்ற சர்வதேச அரசாங்கங்களுக்கிடையிலான நிதிச்செயலாற்றுகை செயலணி, அனைத்து நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய 40 பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கமைய இலங்கை, நிதிச்செயலாற்றுகை செயலணியின் பரிந்துரைகளுக்கமைவாக செயற்படுகின்றதா என்பதை நிதிச்செயலாற்றுகை செயலணியின் பிராந்திய நிறுவனமான பணம் தூய்தாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் வலயக் குழுவால் மதிப்பிடப்படும். குறித்த குழுவால் மேற்கொள்ளப்படும் பரஸ்பர மதிப்பீடு 2025 மார்ச் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்காக மிகச்சிறந்த முறையில் இலங்கையின் நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 2023-2028 பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களை முறியடிப்பதற்கான இலங்கையின் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களைத் தடுத்தல் பற்றி அடையாளங் காணப்பட்டுள்ள பலவீனங்களுக்கு தீர்வுகளாக அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் உள்ளடங்கியதான செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. குத்தகையின் அடிப்படையில் வழங்கல்

இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான வர்த்தக ரீதியான நீர்வாழ் உயிரின வளர்ப்பான உவர்நீர் இறால் வளர்ப்பு மூலம் 2021 ஆம் ஆண்டில் 14,414 மெற்றிக்தொன் உற்பத்திகள் பெறப்பட்டுள்ளதுடன், அதனை 2025 ஆண்டளவில் 50,000 மெற்றிக்தொன்களாக அதிகரிப்பதற்கும், அதன்மூலம் 65,500 மில்லியன் ரூபாய்கள் வெளிநாட்டு செலாவணியாக ஈட்டுவதற்கும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

எனினும், நீர்வாழ் உயிரின வளர்ப்புக்களுக்கு எமது நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட காணிகள் காணப்படுவதால் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்களை மேலும் விரிவாக்கம் செய்வதில் சவால்கள் உள்ளன. இச்சவாலுக்கு முகங்கொடுப்பதற்காக தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியில் உயரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நவீன தொழிநுட்பங்கள் அறிமுகப்படுத்தல் போன்ற பல படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 218 ஏக்கர் மற்றும் 30 பேர்ச்சர்ஸ் காணி குறுகியகால வளர்ப்பு வட்டத்தில் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வனமி வகை இறால் வளர்ப்பு பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

### 03. புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்

'கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பல் சரக்கனுப்புநர்களுக்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநருக்கு உரிமமளித்தல் சட்டம்' பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 'கொள்கலன் சாலைகளில் செயற்படுத்துநர்களை 'சேவை வழங்குநராக' கருதி ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, செயற்படுதல், நவீன வர்த்தகம், கப்பலேற்றுதல் மற்றும் வழங்கல் சேவைகளின் தேவைகள் தொடர்பாக கொள்கலன் சாலை செயற்படுத்துநர்களின் அபிவிருத்தி மற்றும் அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மீது ஆரோக்கியமற்ற வகையில் தாக்கங்கள் ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் கொள்கலன் சாலை செயற்படுத்துநர்களால் மேற்கொண்டு செல்லப்படும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம், கட்டணம் மற்றும் கட்டண வீதங்களைத் தீர்மானித்தல், கட்டணங்களை விதித்தல் மற்றும் சேகரித்தலுக்கான ஏற்பாடுகளுடன் கூடிய புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவும், அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. வான்செலவுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

வான்வெளிச் சேவையை வழங்குவதற்கான சேவை வழங்குநர்கள் அதிகளவானோர் முன்வருவதற்கு இயலுமாகும் வகையில் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6(3)உ பிரிவை திருத்தம் செய்வதற்காக 2023.03.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. சட்டத்தைத் திருத்தம் செய்தல்

சட்டவிரோத பீடைகொல்லிகளை சுற்றாடல் நேயம்மிக்க வகையில் அழிப்பதற்காக செலவாகின்ற அரச பணத்தை தவறாளர்களிடமிருந்து அறிவிடல், தவறாளர்களால் மீண்டும் மீண்டும் மேற்கொள்கின்ற சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகளைப் பலப்படுத்தல் உள்ளிட்ட, ஏனைய ஏற்பாடுகளுடன் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. வெற்றிகள் மற்றும் தொலைநோக்கு

ஜனாதிபதி பதவியில் கடமைகளை ஆரம்பித்த பின்னர், புதிய அமைச்சரவையுடன் இணைந்து குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக, அரச நிதிக் கொள்கை, நாணயக் கொள்கை, மின்சக்தி துறை, கடன் மீள்கட்டமைப்பு, மற்றும் வெளிநாட்டு நிதியிடல் போன்ற துறைகளில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது.

அத்துடன், பொருளாதாரத்தை மீள்நிலைக்குக் கொண்டு வந்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தொடர்ந்து வரும் காலங்களில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மறுசீரமைப்புக்களுக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

### 07. ஊ.சே.நி.சட்டத்தைத் திருத்தம் செய்தல்

உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் சொந்தமான திறைசேரி பிணைமுறிகளை மீள்கட்டமைப்பதால் குறித்த நிதியத்தின் அங்கத்தவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில், அதன் கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த ஐந்து வருட (05) காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்காக செலுத்தப்பட்டுள்ள வருடாந்த வட்டிவீத நன்மைகளைக் கருத்தில் கொண்டு, 2023-2026 வரை தொடர்ந்து வரும் நான்கு (04) வருடங்களுக்கு பங்களிப்புத் தொகை அடிப்படையில் உரித்தான வட்டிவீதத்தை குறைந்தபட்சம் 9மூ வீதமாக அமைய வேண்டுமென நிர்ணயிப்பதற்கு இயலுமாகும் வகையில், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எல்.பி.எல்:

# ஜஃப்னா கிங்ஸை வென்ற தம்புள்ள ஓறா

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸுடனான போட்டியில் தம்புள்ள ஓறா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கிங்ஸ்

ஓறா: 134/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: குசல் பெரேரா 41 (36), சதீர சமரவிக்கிரம 30 (25), ஹெய்டர் கெர் ஆ.இ 25 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொய்ப் மலிக் 2/13 [4], நுவான் துஷார 2/26 [4], மகேஷ் தீக்‌ஷன 1/26 [4], டில்ஷான் மதுஷங்க 0/22 [3], டுனித் வெல்லலாகே 1/28 [3])

கிங்ஸ்: 125/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷொய்ப் மலிக் ஆ.இ 74 (53) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் அலி 3/20 [4], பினுர பெர்ணாண்டோ 1/8 [4], ஹெய்டன் கெர் 1/21 [4], தனஞ்சய டி சில்வா 0/30 [4])

போட்டியின் நாயகன்: ஹஸன் அலி

இந்நிலையில் முன்னதாக நடைபெற்ற கோல் டைட்டான்ஸுடனான போட்டியில் கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் வென்றது.



நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலையில்

# சதுரங்க விளையாட்டு அறிமுகம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை மாணவர்களிடையே சதுரங்க விளையாட்டை பிரபல்யப் படுத்தும் நோக்கில் முதற் கட்டமாக தரம் 7 மாணவர்களுக்கிடையே சதுரங்கத் தொடரொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



சண்பிளவர் வெற்றிக் கிண்ணத் தொடர்:

# சம்பியனானது சம்மாந்துறை விளையாட்டுக் கழகம்

■ நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது சண்பிளவர் விளையாட்டுக் கழகம் நடாத்திய சண்பிளவர் வெற்றிக் கிண்ணத் தொடரில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சண்பிளவரின் 40ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற இத்தொடரில், சாய்ந்தமருது பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கல்முனை ஜிம்ஹானா விளையாட்டுக் கழகத்தை வென்றே சம்மாந்துறை சம்பியனானது.



இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை 18 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 143 ஓட்டங்களென்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஜிம்ஹானா 18 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 97 ஓட்டங்களையே பெற்று 45 ஓட்டங்களால் தோற்றது.

சம்பியனான சம்மாந்துறைக்கு 30,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டதுடன், இரண்டாமிடம் பெற்ற ஜிம்ஹானாவுக்கு 20,000 ரூபாய் பணப்பரிசும், கிண்ணமும் வழங்கப்பட்டது.

பாடசாலைகளுக்கிடையிலான சமபோஷ கால்பந்தாட்டத் தொடர்:

# வெற்றிவாகை சூடிய கிண்ணியா மத்திய கல்லூரி

■ ஒலுமுதீன் கியாஸ்

அகில இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான சமபோஷ கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணியா மத்திய கல்லூரி வெற்றிவாகை சூடியது.



கொழும்பு குதிரை பந்தயத் திடல் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் கொழும்பு சாஹிரா கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே கிண்ணியா மத்திய கல்லூரி மூன்றாவது முறையாக தொடர்ச்சியாக சம்பியனானது.

வட மாகாண விளையாட்டுப் போட்டிகள்:

# அடிப்படை வசதி இன்றி முன்னெடுப்பு?

## மாணவர்கள் குற்றச்சாட்டு

■ பு. கஜிந்தன்

வட மாகாண கல்வி அமைச்சுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறும் நெல்லியடிப் பகுதியில் அடிப்படை வசதி இன்றி தனியார் மைதானங்களில் நேற்று முன்தினம் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக மாணவர் தரப்பில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நெல்லியடியிலுள்ள நான்கு மைதானங்களில் இப்போட்டிகள் இடம்பெற்ற நிலையில் மலசல கூடம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளின்றி காணப்பட்டதாக மாணவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



ஒரு தனியார் விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் கள்ளுத் தவறணை நிலையமும் காணப்பட்டதுடன் குடிநீர் அயல் வீட்டில் இருந்தே மைதானத்துக்கு கொண்டுவரப்பட்டமை கமராக்களில் பதிவாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண விளையாட்டு துறை பணிப்பாளர் ராஜசீலனிடம் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, “குறித்த பிரச்சினை தொடர்பில் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் நாம் நடவடிக்கை எடுத்திருப்போம். மாணவர் நீண்ட நாள் தங்குதல், அவர்களுடைய செலவுகளை கருத்திற்கொண்டு குறித்த நான்கு மைதானங்களையும் தயார்படுத்தியிருந்தோம். பிரச்சினையான மைதானத்தை மாற்றி பிறிதொரு பாடசாலை மைதானத்துக்கு போட்டிகளை மாற்ற ஏற்பாடு செய்துள்ளோம்” எனக் கூறியுள்ளார்.

ஆந்திரா

# 273 வால்நட்களை தலையால் உடைத்து சாதனை

கின்னஸ் சாதனை படைப்பதற்காக இளைஞர்கள் பலரும் பல்வேறு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் பருப்பு வகைகளில் ஒன்றான வால்நட்களை தலையாலேயே உடைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார் இந்தியாவை சேர்ந்த வாலிபர் ஒருவர்.

வால்நட்டின் மேல் ஓட்டை உடைப்பது கடினமான நிலையில், ஒரு நிமிடத்தில் 273 வால்நட்களை உடைத்து ஆந்திர மாநிலம் நெல்லூரை சேர்ந்த நவீன் குமார் இந்த சாதனையை படைத்துள்ளார்.

தற்காப்பு கலைஞரான இவர் கின்னஸ் சாதனை படைப்பதற்காக தலையாலேயே வால்நட்டை உடைக்கும் பயிற்சியில் ஈடுபட்டு வந்தார். இவருக்கு முன்பு பாகிஸ்தானை சேர்ந்த முகமது ரஷித் என்பவர் 254 வால்நட்களை உடைத்தது தான் சாதனையாக இருந்தது. 2017-ம் ஆண்டு இந்த சாதனையை அவர் படைத்திருந்தார்.



இந்நிலையில் சுமார் 5 ஆண்டுகளுக்கு பிறகு முகமது ரஷித்தின் சாதனையை தற்போது நவீன்குமார் முறியடித்துள்ளார்.

புனே

# மோடிக்கு 200 மீட்டர் உயர சிலை



மகாராஷ்டிரா மாநிலம் புனே அருகில் மலைநகரமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் லவாசா சிட்டி அமைந்துள்ளது. இங்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக உள்ளது.

2010-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த நகரத்தை மேம்படுத்த ஒப்பந்தம் பெற்றுள்ள தனியார் நிறுவனமான டார்வின் பிளாட்பார்ம் இன்பிராஸ் டிரக்சர் (டிபிஐஎல்) நிறுவனம் சுற்றுலா பயணிகளை மேலும் கவரும் விதமாக இங்கு பிரதமர் மோடிக்கு 200 மீட்டர் உயரத்தில் உலகிலேயே மிகப்பெரிய சிலையை நிறுவ முடிவு செய்திருக்கிறது.

இந்தச் சிலையை வரும் டிசெம்பர் இறுதிக்குள் கட்டி முடித்து திறந்துவைக்கவும் அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது. திறப்பு விழாவுக்கு இஸ்ரேல், ஜெர்மனி, பிரான்ஸ், சவுதி அரேபியா, அமெரிக்க நாட்டுத் தூதர்களை அழைக்கவும் தனியார் நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது.

உதய்பூர்

# பெண்ணை காலால் மிதித்து படுகொலை

உதய்பூர் மாவட்டம் கொகுண்டா (Gogunda) அருகே உள்ள மலை கிராமத்தில் 85 வயது பெண்மணியை 70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் கொடூரமாக தாக்கியுள்ளார். தலைமுடியை பிடித்து தரதரவென்று இழுத்து கொடுமைப்படுத்தியதுடன், அங்குள்ள மகாதேவன் கோயிலில் வைத்து பெண்மணியை காலால் மிதித்துள்ளார்.

வலி தாங்க முடியாமல் கதறிய பெண்மணி சிறிது நேரத்தில் துடிதுடித்து உயிரிழந்தார். இதுதொடர்பான வீடியோ காட்சி வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பெண்மணியை கொடூரமாக தாக்கிய பிரதாப் சிங்



என்பவரை பொலிஸார் கைதுசெய்தனர்.


மேலும் இரு சிறுவர்கள் உட்பட 3 பேரை பிடித்து விசாரித்து வருகின்றனர். விசாரணையின் போது பிரதாப் சிங் தன்னை சிவபெருமானின் அவதாரம் என்றும், உயிரிழந்த பெண்மணியை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்வேன் என்றும் கூறி காவல்துறையினருக்கு அதிர்ச்சியளித்துள்ளார்.

அமெரிக்கா

# ஏப்பம் விட்டு பெண் சாதனை

அமெரிக்காவைச் சேர்ந்த கிம்பர்லி “கிமிகோலா” விண்டர் என்பவர் சமீபத்தில் ஒரு உலக சாதனை படைத்துள்ளார். உலகிலேயே (பெண்கள் பிரிவில்) அதிக சத்தத்துடன் ஏப்பம் விட்டவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இவரது ஏப்ப சத்தம் 107.3 டெசிபல் அளவை எட்டியுள்ளது. இதற்கு முன்பு, 2009-ம் ஆண்டு, இத்தாலியைச் சேர்ந்த எலிஸா



க்கோனி என்ற பெண் 107 டெசிபல் அளவு ஓசையில் ஏப்பம் விட்டதே சாதனையாக இருந்தது. ஆண்கள் பிரிவை எடுத்துக் கொண்டால், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நெவிலி ஷார்ப் என்பவர் 2021-ம் ஆண்டு 112.7 டெசிபல் அளவிற்கு ஏப்பம் விட்டதே உலக சாதனையாக இருக்கிறது.

விண்டரின் ஏப்ப சத்தம் மிக்ஸி சத்தத்தை விடவும் (70-80 டெசிபல்), எலெக்ட்ரிக் ட்ரிலிங் மெஷின் (90-95 டெசிபல்) ஓசையை விடவும், மோட்டார் பைக்கை முழுதாக முறுக்கும் போது (100-110 டெசிபல்) வரும் ஓசையை விடவும் அதிகமாக இருந்ததாக கின்னஸ் உலக சாதனை புத்தகம் கூறியுள்ளது.

சீனா

# நூடுல்ஸ் பக்கெட்டுகளை வாங்கி அழித்த நபர்

சீனா சாண்டாங்க் மாகாணத்தில் உள்ள ஒரு நூடுல்ஸ் கடைக்கு வாடிக்கையாளர் சென்றுள்ளார். கடைக்காரரிடம் நூடுல்ஸ் விலை பற்றி கேட்டபோது கடைக்காரரும் கூறியுள்ளார். அதை கேட்ட வாடிக்கையாளர் விலை அதிகமென கூறியுள்ளார். இதுதொடர்பாக வாடிக்கையாளருக்கும், விற்பனையாளருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது விற்பனையாளரின் மகன் எழுந்து வந்து உங்களால் அதை வாங்க முடியாது என்றால் வெளியே போங்கள் என வாடிக்கையாளரிடம் ஆவேசமாக கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த வாடிக்கையாளர் தான் அவமானப்படுத்தப்பட்டது போன்று உணர்ந்துள்ளார். உடனே அவர் கடைக்காரரிடம் கடையில் உள்ள அனைத்து நூடுல்ஸ் பக்கெட்டுகளும் சேர்ந்து என்ன விலையைக் கேட்டு, பணத்தை கொடுத்து அனைத்து நூடுல்ஸ் பக்கெட்டுகளையும் வாங்கிய வாடிக்கையாளர் அவை அனைத்தையும் தரையில் அடித்து நொறுக்கி அழித்துள்ளார்.





அமெரிக்கா

# 74 வயது ஆசிரியைக்கு 600 ஆண்டுகள் சிறை

அமெரிக்காவின் விஸ்கான்சினில் தோமாஹாவில் உள்ள ஒரு தனியார் பாடசாலையில் 2016 ஆம் ஆண்டில் ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் அன்னே என் நெல்சன் கோச். அப்போது 14 வயது மாணவனை 25 முறை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார். பாடசாலையின் வகுப்பறைக்கு பின்புறம் மாணவனை ஆசிரியை பலமுறை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அப்போது நெல்சன்-கோச்க்கு 67 வயது, சிறுவனுக்கு 14 வயது என்று கூறப்படுகிறது. சிறுவனை 25க்கும் மேற்பட்ட முறை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கி உள்ளார்.

இந்த வழக்கில் அவருக்கு 600 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என கூறப்படுகிறது. ஒக்டோபர் 27 அன்று தண்டனை



விதிக்கப்படும் வரை நெல்சன் கோச் சிறையில் இருக்குமாறு ஸ்கைல்ஸ் நீதிபதி உத்தரவிட்டார்.

ஆனால் மன்ரோ கவுண்டி சர்க்யூட் நீதிமன்ற நீதிபதி ரிச்சர்ட் ராட்க்ளிப் அவருக்கு தண்டனை விதிக்கப்படும் வரை அவர் ஜிபிஎஸ் மானிட்டர் மூலம் கண்காணிக்கப்படுவார் என கூறி விடுவித்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 9 ஒகஸ்ட் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.